# சபரி சிக்ஷா சன்ஸ்தான்

சபரி பேலஸ், 193, இரண்டாவது அக்ரஹாரம், சேலம் - 636 001.
போன் : 0427-4265414, 94431-65414, 94433-65414, 98427-65414.
மின்னஞ்சல் : **hindiexams@gmail.com** Visit us @ www.shabari.org


## வாணி விகாஸ் – ஓர் பார்வை .....

**உங்களின் கேள்விகளுக்கு இதோ எங்கள் பதில்கள் .....**

**வாணி விகாஸ் தேர்வு எதற்காக நடத்தப்படுகிறது ?**

வாணி விகாஸ் என்பதின் பொருளிலேயே இந்த வினாவிற்கான விடை இருக்கிறது. ஹிந்தி பேசத் தெரியாதவர்களை ஹிந்தியில் பேசவைப்பதே வாணி விகாஸ் தேர்வின் முதல் நோக்கமாகும்.

**வாணி விகாஸ் தேர்வு யாரால் நடத்தப்படுகிறது ?**

வாணி விகாஸ் தேர்வு சேலம் சபரி சிக்ஷா சன்ஸ்தானால் நடத்தப்படுகிறது. தமிழ்நாட்டில் ஹிந்தி சேவையில் முன்னணி நிறுவனமான சபரி குழுமத்தினரால் வாணி விகாஸ் தேர்வு நடத்தப்படுகிறது.

**வாணி விகாஸ் தேர்வு வாய்மொழித்தேர்வா அல்லது எழுத்து தேர்வா ?**

பேச்சாற்றலை வளர்ப்பதே வாணி விகாஸின் கொள்கையாகும், எழுதுகின்ற வேலை இதில் கிடையாது.

**வாணி விகாஸ் தேர்வுக்கான வயதுவரம்பு என்ன ?**

எட்டு (8) வயது பூர்த்தியடைந்த அனைவரும் வாணி விகாஸ் தேர்வில் பங்கேற்கலாம். வாணி விகாஸ் தேர்வின் முதல் நிலை தேர்வில் பங்கேற்பவர்கள் விண்ணப்பத்துடன் தங்கள் பிறப்பு சான்றிதழ் நகலினை கட்டாயம் இணைக்க வேண்டும்.

**வாணி விகாஸ் தேர்வுக்கான அடிப்படை கல்வித் தகுதி என்ன ?**

வாணி விகாஸ் தேர்வுக்கென அடிப்படைக் கல்வித் தகுதி ஏதும் தேவை இல்லை.

**வாணி விகாஸ் தேர்வு எந்தெந்த மாதங்களில் நடைபெறுகிறது ?**

வாணி விகாஸ் தேர்வு ஜனவரி, ஏப்ரல், ஜூலை மற்றும் அக்டோபர் மாதங்களில் நடைபெறுகிறது.

**வாணி விகாஸ் எத்தனை தேர்வுகள் அல்லது நிலைகளைக் கொண்டது ?**

வாணி விகாஸ் தேர்வானது ஆறு நிலைகள் கொண்டது.

**வாணி விகாஸ் தேர்விற்கு தனியான பாடப்புத்தகம் உள்ளதா ?**

வாணி விகாஸ் ஆறு நிலைகளுக்கும் தனித்தனியே பாட புத்தகங்கள் உள்ளது.

**வாணி விகாஸ் தேர்வில் ஒவ்வொரு நிலையாகத் தான் பங்கு பெற முடியுமா ?**

ஆம். வாணி விகாஸ் தேர்வில் ஒவ்வொரு நிலையாகத் தான் பங்கு பெற முடியும். ஒரே சமயத்தில் இரண்டு நிலைகளுக்கு விண்ணப்பிக்க இயலாது. நேரடியாக இரண்டாவது அல்லது அதற்கு அடுத்த நிலைக்கோ விண்ணப்பிக்க இயலாது. இரண்டாவது நிலையிலிருந்து ஆறாவது நிலை வரை விண்ணப்பிப்பவர்கள் தாங்கள் தேர்ச்சி பெற்ற முந்தைய நிலையின் 10 இலக்க தேர்வு எண்ணை (10 Digit Exam Register Number) தேர்வு விண்ணப்பத்தில் தெளிவாக எழுதி அனுப்பவேண்டும்.

**வாணி விகாஸ் தேர்வு மையங்கள் எங்கெங்கு உள்ளது என்று தெரிந்து கொள்ளலாமா ?**

வாணி விகாஸ் தேர்வில் குறைந்தது 30 மாணவர்கள் இருந்தால் உங்கள் இடத்திலேயே தேர்வு மையம் அமைக்கப்படும். அதற்கும் குறைவாக

15 முதல் 29 வரை உள்ள நிலையில் தேர்வுமையக் கட்டணமாக ரூ.500 செலுத்த வேண்டும். **அவ்வாறான நிலையில் மற்றவர்களிடம் பயிலும் ஒரு சில மாணவர்கள் தங்கள் தேர்வு மையத்தில் பங்கேற்பார்கள்.** தேர்வுமையக் கட்டணத்தை எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித் தர இயலாது.

**வாணி விகாஸ் தேர்வுக்கு மதிப்பெண் பட்டியல் மற்றும் சான்றிதழ் உள்ளதா ?**

ஆம், உள்ளது. வாணி விகாஸ் தேர்வு முடிந்து முப்பது நாட்களுக்குள் தேர்வு மதிப்பெண் பட்டியல் மற்றும் சான்றிதழ் அனுப்பி வைக்கப்படும். தேர்வு முடிவுகள் www.shabari.org-ல் வெளியிடப்படும்.

**தேர்வு யாரால் நடத்தப்படும் ?**

சபரியால் தேர்ந்தெடுக்கப்பட்ட அனுபவமிக்க ஆசிரியரால் தேர்வு நடத்தப்படும்.

**இத்தேர்வுக்கான மாதிரி வினாத்தாள் உள்ளதா ?**

பாட புத்தகத்தின் கடைசிப்பக்கத்தில் மாதிரி வினாத்தாள் உள்ளது.

**வாணி விகாஸ் தேர்வு மாணவர்களுக்கு பயனுள்ளதா ?**

ஹிந்தியின் இமாலய வளர்ச்சி, பயனுள்ள பயிற்சியில் மாணவர்கள் நிச்சயம் பலன் பெறுவர்.

**வாணி விகாஸ் தேர்வுக்கான புத்தக கட்டணம் மற்றும் தேர்வு கட்டண விபரம் :**

| தேர்வின் பெயர் | கட்டணம் |
|---|---|
| வாணி விகாஸ் நிலை-1 | ₹150.00 |
| வாணி விகாஸ் நிலை-2 | ₹155.00 |
| வாணி விகாஸ் நிலை-3 | ₹160.00 |
| வாணி விகாஸ் நிலை-4 | ₹165.00 |
| வாணி விகாஸ் நிலை-5 | ₹170.00 |
| வாணி விகாஸ் நிலை-6 | ₹175.00 |

**தபால் கட்டணம் ஏதேனும் உண்டா ?**

ஆம். ஆறு மாணவர்களுக்கு குறைவாக இருப்பின் தபால் செலவு ₹50/- சேர்த்து அனுப்பவும்.

**தேர்வுக் கட்டணம் செலுத்துவது எப்படி ?**

தேர்வுக் கட்டணத்திற்குரிய தொகையினை பின்வருமாறு செலுத்தலாம் :

❶ மணியார்டர் (M.O.) செய்பவர்கள் மணியார்டர் இரசீதுடன் தங்களின் தேவைகளை தெளிவாக குறிப்பிட்டு எங்களுக்கு கடிதம் அனுப்பவேண்டும்.

❷ வங்கி வரைவோலை (D.D.) "Shabari Siksha Sansthan, Salem" என்ற பெயரில் அனுப்புபவர்கள், D.D-யுடன் தங்களின் தேவைகளை தெளிவாக குறிப்பிட்டு எங்களுக்கு கடிதம் எழுதி அனுப்பவும்.

❸ வங்கியில் பணமாக தேர்வு கட்டணம் செலுத்தும் நபர்கள் **Original Cash Receipt**-டுடன் தங்களின் தேவைகளை தெளிவாக குறிப்பிட்டு எங்களுக்கு கடிதம் அனுப்பவேண்டும்.

❹ வாணி விகாஸ் தேர்வு கட்டணத்தை **SHABARI SIKSHA SANSTHAN** என்ற வங்கி கணக்கிற்கு **Fund Transfer** செய்பவர்கள், அதன் அத்தாட்சியுடன் **(e-receipt)** தங்களின் தேவைகளை **hindiexams@gmail.com** என்ற முகவரிக்கு தெளிவாக எங்களது **Excel File**-ஐ பூர்த்தி செய்து இ-மெயில் அனுப்பவும்.

**வாணி விகாஸ் தேர்வுகள் நடைபெறும் தேதிகளின் விவரம் :**

| தேர்வு நடைபெறும் மாதம் | தேர்வு நடைபெறும் தேதி | தேர்வு விண்ணப்பங்கள் வழங்கும் நாள் | ரூ. 10/- தாமதக் கட்டணத்துடன் செலுத்த கடைசி தேதி |
|---|---|---|---|
| **அக்டோபர்** | **21.10.2018** | 01.07.2018 to 31.08.2018 | 05.09.2018 |
| **ஜனவரி** | **20.01.2019** | 01.10.2018 to 30.11.2018 | 05.12.2018 |
| **ஏப்ரல்** | **21.04.2019** | 01.01.2019 to 28.02.2019 | 05.03.2019 |
| **ஜூலை** | **21.07.2019** | 01.04.2019 to 31.05.2019 | 05.06.2019 |